# அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்

## 2026 முதல்நிலைத் தேர்வு பயிற்சி சேர்க்கைக்கான அறிவிப்பு

அறிவிக்கை எண்:அ/1020/2025 நாள்: 08.09.2025

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் மற்றும் நான் முதல்வன் போட்டித்தேர்வு பிரிவுடன் இணைந்து நடத்தப்பட்ட 2026-ஆம் ஆண்டுக்கான ஒன்றிய தேர்வாணைய குடிமைப்பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு பயிற்சிக்கான பொது நுழைவுத் தேர்வில் பங்கு பெற்றவர்களின் முழுமையான மதிப்பெண் பட்டியல், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (www.civilservicecoaching.com) வெளியிடப்பட்டுள்ளது. மதிப்பெண் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆர்வலர்கள் சென்னை முழுநேரப் பயிற்சிக்கு 225 நபர்கள் மற்றும் பகுதி நேரப் பயிற்சிக்கு 100 நபர்கள் மற்றும் மதுரை முழு நேரப் பயிற்சிக்கு 100 நபர்கள், கோயம்புத்தூர் முழு நேரப் பயிற்சிக்கு 100 நபர்கள் என மொத்தமாக 525 நபர்கள் தேர்வு செய்யப்படுவர். மதிப்பெண் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆர்வலர்களில் விண்ணப்பிக்கும் ஆர்வலர்களின் தரவரிசை மற்றும் இட ஒதுக்கீட்டு விதிகளின்படி கலந்தாய்விற்கு அழைக்கப்படுவர்.

சென்னை (முழு நேரம், பகுதி நேரம்) மற்றும் கோயம்புத்தூர் (முழு நேரம்). மதுரை (முழு நேரம்) ஆகிய அனைத்து மையங்களுக்கும் கலந்தாய்வு அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் "காஞ்சி"பசுமைவழிச்சாலை, சென்னை-28-ல் மட்டுமே நடைபெறும். கலந்தாய்வில் ஆர்வலர்கள் தங்களது விருப்ப மையங்களை தெரிவு செய்யலாம். கலந்தாய்வின் போது மூல ஆவணங்கள் சரிப்பார்க்கப்பட்டு (Certificate Verification) தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Allotment Order) வழங்கப்படும். ஏற்கனவே, இப்பயிற்சி மையங்களில் முழுநேர மற்றும் பகுதி நேர பயிற்சி பெற்றவர்களுக்கு இரண்டாவது முறை முறையே முழுநேர மற்றும் பகுதி நேர பயிற்சிக்கு விண்ணப்பிக்க இயலாது.

**வகுப்பு:**

| | |
|---|---|
| (அ) முழு நேரப் பயிற்சி வகுப்புகள் | வகுப்பு கால அட்டவணைப்படி வகுப்புகள் எடுக்கப்படும். |
| (ஆ) பகுதி நேரப் பயிற்சி வகுப்புகள் | வாராந்திர நாட்களில் மாலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை |
| | சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை |

விடுதி வசதி:

| | |
|---|---|
| (அ) முழு நேரப் பயிற்சி | கட்டணமின்றி பயிற்சி, தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். |
| (ஆ) பகுதி நேரப் பயிற்சி | விடுதி வசதி வழங்கப்பட மாட்டாது. |

1.முக்கியமான நாள் மற்றும் நேரம்:

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பப் பதிவு துவங்கும் நாள் | 09.09.2025 |
| 2 | விண்ணப்பப் பதிவு முடிவடையும் நாள் | 14.09.2025 |
| 3 | முதற்கட்ட தெரிவுப் பட்டியல் வெளியீடு | 17.09.2025 |
| 4 | கலந்தாய்வு (ம) சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் இடம்:<br>அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் "காஞ்சி" பசுமைவழிச்சாலை,<br>சென்னை-28. | 22.09.2025<br>23.09.2025<br>24.09.2025 |
| 5 | தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு விடுதி அறை ஒதுக்கீடு (ம) காப்புத் தொகை செலுத்துதல் | 29.09.2025<br>30.09.2025 |
| 6 | முதல்நிலை தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் துவக்க நாள் | 03.10.2025 |

2.விண்ணப்பிக்கும் நடைமுறை:

விண்ணப்பங்கள் இணைய வழி மூலம் மட்டும் வரவேற்கப்படுகின்றன. இணையவழி விண்ணப்பங்களை (www.civilservicecoaching.com) என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

**நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் 26.07.2025 அன்று நடத்தப்பட்ட நுழைவுத்தேர்வில் பங்குப்பெற்று மதிப்பெண் பட்டியலில் இடம்பெற்றுள்ள தேர்வர்கள் மட்டுமே முதல்நிலை தேர்வு பயிற்சிக்கு விண்ணப்பிக்க இயலும்.**

**3.தேவையான சான்றிதழ்கள்:**

கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிப்பார்ப்பின் போது கீழ்க்காணும் மூலச் சான்றிதழ்களையும் (Original Certificates) அவற்றின் 3 நகல்களையும் (Xerox) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. பிறப்பிட சான்றிதழ் (Nativity Certificate)
2. வருமான சான்றிதழ் (Income Certificate)
3. சாதி சான்றிதழ் (Community Certificate)
4. அனைத்து கல்வி சான்றிதழ்கள் (SSLC, HSC, UG, PG Certificates)
5. மாற்று சான்றிதழ் (Transfer Certificate)
6. வங்கி கணக்கு புத்தகம் (Bank Passbook)
7. ஆதார் (Aadhar Card)
8. Passport Size Photo- 3 & Stamp Size Photo- 2
9. மாற்றுத்திறனாளி சான்றிதழ் (DAP Certificate) (மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் மட்டும்)

கலந்தாய்வு மற்றும் மூலச் சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரும்போது, தேவையான மூலச் சான்றிதழ்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ்களையோ சமர்ப்பிக்கத் தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. மேலும், தரவரிசை மற்றும் இட ஒதுக்கீட்டின் படி அடுத்த ஆர்வலருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**4.காப்புத்தொகை:**

| வகுப்பு(இனவாரியாக) | செலுத்த வேண்டிய காப்புத்தொகை (திரும்ப வழங்கக்கூடியது) |
|---|---|
| ஆதிதிராவிடர்/அருந்ததியர்/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் /பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) / பொதுப்பிரிவினர் | ரூ.3000/- |

*சென்னை மையத்திற்கு மட்டும் காப்புத் தொகை வசூலிக்கப்படும். மதுரை (ம) கோயம்புத்தூர் மையங்களுக்கு காப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை.

**5.நிபந்தனைகள்:**

(அ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் இவைகளில் ஏதேனும் ஒன்றில் ஏற்கனவே உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் இரண்டாவது முறை உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சிக்கு அனுமதி இல்லை. எனினும், பகுதி நேர பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(ஆ) சென்னை மையத்தில் ஏற்கனவே பகுதி நேரப் பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் இரண்டாவது முறை பகுதி நேரப் பயிற்சிக்கு அனுமதி இல்லை. எனினும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் இவைகளில் ஏதேனும் ஒன்றில் உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(இ) முழு நேரம்/பகுதி நேரப் பயிற்சி இரண்டிலும் பங்கு பெறாத ஆர்வலர்கள் உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சி/பகுதி நேரப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

(ஈ) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் பயிற்சி மையங்களில் ஒரு முறை உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சி மற்றும் சென்னை மையத்தில் ஒரு முறை பகுதி நேரப் பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் இம்மையங்களில் முதல்நிலைப் பயிற்சி பெற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(உ) அரசு பணியில் உள்ளவர்கள் உண்டு உறைவிடத்துடன் கூடிய முழு நேரப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க இயலாது.

(ஊ) கலந்தாய்வின் போது தேர்வரின் விருப்பத்தின் பெயரில் தெரிவு செய்யபட்ட மையமே இறுதியானது. எனவே, தேர்வர்கள் கலந்தாய்வில் தாங்கள் தெரிவு செய்த மையத்தை எக்காரணம் கொண்டும் பின்நாளில் மாற்றம் செய்ய இயலாது.

(எ) கலந்தாய்வு முழுமையாக முடிவடையும் வரை, தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Allotment Order) பெற்றவர்களுக்கு விடுதி அறை ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள (29.09.2025/ 30.09.2025) ஆகிய நாட்களில் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட மையங்களில் விடுதி அறை ஒதுக்கீடு செய்யப்படும். எனவே, ஆர்வலர்கள் தங்களது உடைமைகளை கலந்தாய்வின் போது கொண்டு வர வேண்டாம்.

(ஏ) விண்ணப்பதாரர் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் நடத்தப்பட்ட நுழைவுத்தேர்வில் அவர் பெற்ற மதிப்பெண் (ம) இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் கலந்தாய்விற்கு அழைக்கப்படுகிறார். எனவே, குறித்த நாள் மற்றும் நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். தவறும் பட்சத்தில் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. மேலும், தரவரிசை மற்றும்

இட ஒதுக்கீட்டின் படி அடுத்த ஆர்வலருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் இதர வழிகளில் கலந்தாய்வு நாள் மற்றும் நேரம் ஆகியவற்றை மாற்றக் கோரி வரும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**6.பயிற்சி மையத்துடனான தகவல் தொடர்பு:**

மேலும் விவரங்களுக்கு, 044-24621475 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும், 9345766957 என்ற புலன எண்(Whatsapp) மூலமாகவும், aicscc.gov@gmail.com என்ற அலுவலக மின்னஞ்சல் மூலமாகவும் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

முதல்வர்